**கடத்தலைத் தவிர்க்க உங்களின் கடமை என்ன?**

- கடத்தல் பற்றிய விபரங்களை பிறருக்கும் தெரிவித்து குழந்தைகளின் பாதுகாப்புக்கு உதவுவது.
- பள்ளிகளிலிருந்து இடைநிற்றலை தவிர்க்க தீவிர பிரச்சாரம் செய்தல்
- கிராமசபைக் கூட்டங்களில் இதைப்பற்றி எடுத்துரைத்தல்
- வீட்டு வேலைக்கு குழந்தைகளை பணியமர்த்துவதை தன் வீட்டில் தவிர்ப்பது மற்றும் அது குறித்து தனக்கு தெரிந்தவர்களிடம் விளக்குவது.
- சக பணியாளர்களுக்கும் குழந்தை கடத்தலைப் பற்றி தெரிவிப்பது.
- குழந்தைகளுக்கு 1098 என்ற இலவச தொலைபேசி (CHILDLINE) பற்றி விளக்கி சொல்வது.
- குழந்தை பாதுகாப்பினை உறுதிசெய்தல் பொதுமக்கள் மற்றும் தனிநபர் கடமை என்பதால், சமூகம் சார்ந்த குழந்தை நல்லிணக்க சூழல் உருவாக்க முயற்சிப்பது.
- பள்ளி மேலாண்மைக்குழுவில் குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை பரப்புரை செய்தல்.
- தன் கவனத்திற்கு வரும் குழந்தைகள் துன்புறுத்தலை கிராம கண்காணிப்புக் குழு அல்லது மாவட்ட ஆலோசனைக்குழு அல்லது காவல்துறையின் கவனத்திற்கு கொண்டுசெல்லுதல்.


நன்றி:

**முனைவர் க. சண்முகவேலாயுதம்**

நிறுவனர்

இளங்குழந்தையின் உரிமை பேணும் நிறுவனம், (FOR YOU CHILD)

சென்னை-29



வெளியிடுவோர்:

**சிவா அறக்கட்டளை**

திருமலாபுரம், சங்கரன்கோவில் வட்டம், நெல்லை மாவட்டம்

தொலைபேசி எண் : **04636-270116**

மின்னஞ்சல் : **sivatrust.tpuram@gmail.com**

சிவா அறக்கட்டளையின் குழந்தைகள் நல தொலைபேசி எண்:

**94882 61089**



உதவி: terre des hommes stops child exploitation





# குழந்தை கடத்தல்

## (Child Trafficking)

**எது குழந்தை கடத்தல்?**

ஏழ்மை, இயலாமை, வேலைவாய்ப்பின்மை மற்றும் பிற காரணங்களினால் துன்பச் சூழல் அல்லது கணவன் பிரிவு அல்லது மறைவு போன்ற சூழலில் இருப்பவர்களின் பொருளாதார நெருக்கடியை அல்லது இக்கட்டான சூழ்நிலையினை சாதகமாக பயன்படுத்தி ஒரு இடத்திலிருந்து தொலை தூரங்களுக்கு பெற்றோரின் சம்மதத்துடன் வேலைக்கு அழைத்துச் செல்வது குழந்தை கடத்தலாகும்.

**வேலைக்கு அழைத்துச் செல்வது எவ்வாறு கடத்தலாகும்?**

வேலைக்கு அழைத்துச் செல்வது வறுமையில் அல்லது இயலாமையில் இருப்பவர்களுக்கு வருமானத்திற்கு வழிவகை செய்திடும் உதவிகரமான செயலாகும்போது, எப்படி அதனை குழந்தை கடத்தல் எனக் கூறுவது என்ற எண்ணம் அனைவரிடத்திலும் உள்ளது. இது தவறான கருத்தாகும்.

அனுசரணையான பேச்சு மற்றும் அணுகுமுறை, ஆசைவார்த்தைகள், வசதியான வாழ்க்கை மற்றும் இருப்பிட வசதி என்று உறுதியுடன் தெரிவித்து, பெற்றோரின் சம்மதத்துடன் அழைத்துச் செல்லப்படும் குழந்தைகள் உண்மையிலேயே அடிமைகளாக, உடல்ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதுடன் பல சூழல்களில் பாலியல் தொந்தரவிற்கும் உட்படுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் கணக்கில் அடங்காதவைகளாகும்.

- அதிகப்படியான வேலைப்பளு
- சுகாதாரமற்ற சூழலில் இருப்பிடம் (பெரும்பாலும் சமையலறையில் மற்றும் கழிப்பறையின் அருகாமையில்)
- பெற்றோர்களின் தொடர்பின்மை

- வேலை செய்யும் வீடு அல்லது பணியிடத்தை விட்டு வெளியில் செல்ல இயலாத சூழல்
- முறையான ஓய்வு, தூக்கம் மற்றும் பொழுதுபோக்கு இன்மை
- சிறிய தவறுக்கும் கடுமையான தண்டனை
- முறையான மருத்துவ வசதி இன்மை
- வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை அல்லது ஊதியமே இல்லாத அடிமைத்தனமான வாழ்க்கை

எனவே, ஏமாற்று வார்த்தைகள் மூலமாக ஆசைவார்த்தை கூறி அழைத்துவரப்படும் குழந்தைகளின் நிலையே குழந்தை கடத்தலாகும்.

**வேலைக்கு அனுப்புவதனால் உள்ள இடர்பாடுகளிலிருந்து குழந்தைகளை காப்பது எப்படி?**

குழந்தை கடத்தல் என்பது மனித உரிமை மீறல் மற்றும் அதற்கு எதிரான செயல்பாடு. எனவே, குழந்தைகளை இடம்பெயர்வதிலிருந்து தவிர்ப்பது அனைவரின் தார்மீக பொறுப்பு மற்றும் கடமையாகும். தாங்கள் வசிக்கும் பகுதிகளில் வீட்டுவேலைக்கு குழந்தைகள் அழைத்துவரப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பின், அந்தத் தகவலை

- 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் குழந்தைநல இலவச தொலைபேசி எண் 1098க்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கலாம். தகவல் கொடுப்பவர் பற்றிய விபரத்தை தெரிவிக்கவேண்டிய தேவையில்லை.
- மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டுசென்று நடவடிக்கை கோரலாம்.
- தங்கள் வசிப்பிட பகுதியின் நலச்சங்கங்களின் மூலமாக அத்தகைய செயல்களை தவிர்க்க விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
- அரசுப் பணியாளர்கள் வீடுகளில் குழந்தைகளை வேலைக்கு வைப்பது நன்னடத்தை விதிகளுக்கு எதிரானது என்பதுடன், இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் முடியும் என்பதையும் வலியுறுத்தலாம்.

**குழந்தைகள் வீட்டு வேலைக்கு, பாலியல் தொழிலுக்கு மட்டும் கடத்தப்படுகின்றனரா?**

வசதியான வாழ்க்கை, கைநிறைய ஊதியம் என்று பொய்யுரைத்து அழைத்துச் செல்கின்றபோது வழங்கப்படும் சிறுதொகையினைத் தவிர வேறு சலுகைகள் பெற்றோர் பெறுவதில்லை. மிகவும் அதிகமான குழந்தைகள் ஊதியம் இல்லாமல் அடிமைகளாகவே நடத்தப்படுவதும், ஏமாற்றப்படுவதும் உண்மை நிகழ்வுகள். கடத்தல் என்பது, வீட்டு வேலைக்கு, பாலியல் தொழிலுக்கு மட்டும் அல்ல.

- பிச்சையெடுக்க ஈடுபடுத்தவும்,
- சட்டத்திற்கு புறம்பாக தத்துக்கொடுக்கவும்,
- குழந்தைத் தொழிலாளர்களாக அவர்களின் சக்திக்கும், திறனுக்கும் எதிரான வேலைகளிலும், ஆபத்தான பணிகளிலும் ஈடுபடுத்திடவும்,
- போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுத்தவும்,
- கேளிக்கை அரங்குகளில் ஆபாசமான சூழலில் பயன்படுத்தவும்,
- பெரும்பாலும் கிராமப்புறத்திலுள்ள குழந்தைகள் கடத்தப்படுகின்றனர்.

**கடத்தல் என்பது இவ்வளவு மோசமானதாகவும், மனித உரிமை மீறலாகவும் இருக்கும்போது, இதற்கு பொறுப்பானவர்கள் மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ள இயலும்?**

கடத்தல் என்பது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டம் (IPC) மற்றும் பிற சிறப்பு சட்டங்களிலும் தெளிவாக விளக்கப்படவில்லை. கடத்தல் என்பது அதற்கான நபர்களை அடையாளம் கண்டு, ஏமாற்றி, ஆசைவார்த்தைகள் கூறி பயன்கள் பெறுவதாகும்.

மேற்கண்ட குற்றங்களுக்கான இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டப் பிரிவுகளுடன், பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின் கற்பழிப்பு மற்றும் அதனை சார்ந்த பிரிவுகளிலும், உடல்ரீதியான காயங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அத்தகைய காயங்களின் ஆழம், அவற்றின் தழும்புகள் மற்றும் பாதிப்புகளின் அடிப்படையிலும், அதற்கான இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டப் பிரிவுகள் மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO) 2012ன் பிரிவுகளையும் இணைத்து வழக்குகள் மேற்கொள்ளலாம்.

மேலும், பாதிப்பிற்குள்ளான குழந்தைகள் தங்கியிருந்த சூழல்கள் மற்றும் அவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் 2000ம் வருடத்திய (2006ல் திருத்தப்பட்ட) சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் (JJ ACT) பிரிவுகள் 23-26 ஆகியவற்றின் அடிப்படையிலும், 1986ம் வருட குழந்தை தொழிலாளர் (ஒழிப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (CLA), 1976ம் வருட அடிமைத் தொழிலாளர் ஒழிப்புச் சட்ட (BLAA) பிரிவுகளின் அடிப்படையிலும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது அரசு பணியாளர்கள் அனைவரது தார்மீக கடமை மற்றும் பொறுப்பு என சிறார் நீதிச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தகைய குழந்தைகள் பற்றிய தகவல்களை குழந்தைகள் நலக்குழுவிற்கு கொண்டுசெல்லவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.